பக்கங்கள் 14+4

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 12 திங்கட்கிழமை 25.03.2024 அதிர்வு 238

# மைத்திரி இன்று சி.ஐ.டியில் ஆஜர்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று காலை குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தில்

04



# மக்கள் மனதை வென்ற ஒரே தலைவர் ரணிலே!

## அவர்தான் அடுத்த ஜனாதிபதியாகவும் வருவார் என்று மனுஷ அதீத நம்பிக்கை



"இலங்கையில் தற்போது இருக்கும் மூத்த அரசியல் தலைவர்களில் சகல இன மக்களினதும் மனதை வென்ற ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளங்குகின்றார். அவர்தான் அடுத்த ஜனாதிபதியாகவும் வருவார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை."

- இவ்வாறு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தல் காலம் நெருங்கும் வேளையில் சிலர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறு கோரி வருகின்றார்கள். அவர்கள் என்ன நோக்கத்துக்காக அப்படிச் சொல்கின்றார்கள் என்று தெரியவில்லை.

04

# புதிய அரசியல் கூட்டணியா? மே இற்குப் பின் வாருங்கள்

## எதிர்க்கட்சிகளிடம் சந்திரிகா தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலையொட்டி அரசியல் கூட்டணி அமைப்பதாக இருந்தால் அது பற்றிப் பேசுவதற்காக மே மாதத்துக்குப் பின் என்னிடம் வாருங்கள் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எதிர்க்கட்சிகளிடம் கூறியுள்ளார்.

மே மாதத்துக்குப் பின்பே தேர்தல் விடயங்கள் சூடு பிடிக்கும் என்றும், அப்போது கூட்டணி அமைப்பது தொடர்பில் செயலில் இறங்குவதே பொருத்தமாக இருக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்தத் தகவலை தெற்கு ஊடகம் ஒன்று செய்தியாக வெளியிட்டுள்ளது.

# புதிய மறுசீரமைப்புக்களின் ஊடாக மாத்திரமே பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும்

## சில அரசியல்வாதிகள் தமது அரசியல் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும்போது நான் நாட்டைப் பற்றியே சிந்தித்தேன் என்று ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

புதிய மறுசீரமைப்புக்களின் ஊடாக மாத்திரமே பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்றும், கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைப் போல எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதை உறுதி செய்யும் அரசின் வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

ஏனைய அரசியல்வாதிகள் பொறுப்பேற்கத் தயங்கிய நாட்டையே தான் பொறுப்பேற்றதாகத் தெரிவித்த ஜனாதிபதி, சிலர் தமது அரசியல் எதிர்காலம் பற்றி மட்டுமே சிந்தித்த போதும், தான் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றியே சிந்தித்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

பொலனறுவையில் நடைபெற்ற "யுனைட் யூத் இளைஞர் ஒன்றியம்" உடனான சிநேகபூர்வ கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி தெரிவித்தார்.

"ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்" என்ற இச்சந்திப்பில் நாட்டின் எதிர்காலம் மற்றும் தூரநோக்குக் குறித்து இளைஞர்களுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, இளையோரின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசு மேற்கொண்டு வரும் புதிய பொருளாதார சீர்திருத்தங்களின் பிரதிபலன்கள் இன்னும் சில வருடங்களில் மக்களுக்கு கிடைக்கும் என்றும், எனவே, தங்களினதும் நாட்டினதும் எதிர்காலத்துக்கான சிறந்த வழி எதுவென்பதை நாட்டின் இளைஞர்கள் தீர்மானிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"சரிவடைந்திருந்த நாட்டையே நான் பொறுப்பேற்றேன். அவ்வாறான நிலையில் அரசியல்வாதிகள் நாட்டைப் பொறுப்பேற்கத் தயங்கினர். நான் பொறுப்பேற்காவிட்டால் நாட்டின் நிலைமை என்னவாகும் என்பதை சிந்தித்தேன். அந்த நேரத்தில் நாட்டை பொறுப்பேற்றால் அரசியல் நலன்களை இழக்க நேரிடுமென பலரும் நினைத்தனர். அவர்கள் தங்களைப் பற்றி மட்டும் சிந்தித்தனர். நான் நாட்டை பொறுப்பேற்காவிடின் எமக்கான நாடொன்று எஞ்சியிருக்குமா என்பதையே நான் சிந்தித்தேன்.

நாடாளுமன்றத்தில் தனியொரு ஆசனம் மட்டுமே இருந்தது. எனக்கு இருந்த ஒரே பிரச்சினை அதுவாகவே இருந்தது. அதற்கு முன்னதாக நான் டிசம்பர் மாதமளவில் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் கலந்துரையாடியிருந்தேன். உலக வங்கியுடனும் கலந்தாலோசித்தேன்.

அதுபற்றி முன்னாள் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி வேலைத்திட்டத்தை நடைமுறை படுத்துமாறு கூறினேன். அத்துடன் கடந்த தேர்தல் சமயத்தில் நாட்டில் பணமில்லை என்பதை ஐ.தே.க. அறிவித்தது. குறைந்தபட்சம் 300 கோடி டொலர்களையாவது கையிருப்பில் வைத்திருக்க வேண்டியது அவசியம் எனக் கூறியது. அப்போது மக்கள் எமக்கு வாக்களிக்கவில்லை. ஆனால், 2021 ஆம் ஆண்டில் நாம் கூறியவை உண்மையாக நிகழ்ந்தன.



அத்தகைய நிலையில் நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். நான் நாட்டைப் பொறுப்பேற்றுக்காவிட்டால் என்ன நடந்திருக்கும்? நாட்டின் பொருளாதாரம் முழுமையாக முடங்கிப் போயிருக்கும். சரிவடைந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை நாடினோம். தற்போது சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் வெற்றியடைந்துள்ள நிலையில், எமக்குக் கடன் வழங்கிய நாடுகளுடன் பேச்சுகளை ஆரம்பித்துள்ளோம்.

இந்தக் கலந்துரையாடல்களின் பின்னர் எமது நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு அந்த நாடுகளின் உதவிகள் கிட்டும். அதனால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடாது. நாம் இன்னும் இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தையே கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு வருடத்திலும் ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகமாகக் காணப்படுகின்றது. அந்த இடைவெளியைச் சரிசெய்ய மீண்டும் கடன்களைப் பெறுகின்றோம். இந்நிலை தொடர்ந்தால் இன்னும் 10 வருடங்களில் மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிவிடுவோம்.

நீங்கள் 27 வயது இளைஞராக இருந்தால் உங்களுக்கு 37 வயதாகும் போது மீண்டும் இதே போன்ற பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நீங்கள் தயாரா என்று கேட்க விரும்புகின்றேன். எரிபொருள் கொள்வனவு செய்ய பணம் இல்லாத, பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நாட்டை ஏற்க அன்று யாராவது இருந்தார்களா? இந்தப் பொருளாதார நெருக்கடியை அடுத்த தலைமுறைக்கும் கொண்டுச் செல்லாமல் இருப்பது அனைவரினதும் பொறுப்பாகும். அதற்காக அர்ப்பணிக்க வேண்டும். விரைவில் நாம் பொருளாதார மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டும். இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தில் இருந்து ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்துக்கு நாம் செல்ல வேண்டும்.

அதற்கு நகரங்களில் மாத்திரமின்றி கிராமங்களினதும் பொருளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டும். வரவு – செலவுத் திட்டத்தைச் சரியாக வரையறுக்க வேண்டும். அரசின் திட்டங்கள் சரியாகச் செயற்படுத்தப்பட்டால் 2035 ஆம் ஆண்டுக்குள் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கி நகர முடியும். அதன் பின்னர் துரித பொருளாதார அபிவிருத்தியை எட்ட முடியும்.

அத்துடன் வருடாந்தம் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 25 – 50 இலட்சம் வரையில் அதிகரிக்க வேண்டும். மேலும், அதிக பணம் செலவிடும் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வர வேண்டும்.

மேலும், விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் கிராமங்களைப் பலப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதனூடாக விவசாய ஏற்றுமதி இலக்குகளை விரைவில் அடையலாம். இதன் போது புதிய பயிர்களை விளைவிப்பது தொடர்பில் நாம் கவனம் செலுத்தியிருப்பதோடு, தூரியன் உற்பத்தி குறித்து தாய்லாந்து அரசுடன் கலந்துரையாடிள்ளோம். மேலும், இந்நாட்டில் பயிர் உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தைப் பலப்படுத்த முடியும்.

சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரத்திற்கான சாத்தியக்கூறுகள் நாட்டில் அதிகமாக உள்ளன. அதனால் காற்றாலை மற்றும் அனல் மின்சாரத்திற்கான வலுசக்தி உற்பத்தியில் தன்னிறைவை ஏற்படுத்தி, தேவைக்கு அதிகமான மின்சாரத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்ய முடியும். அத்துடன் இந்தியாவின் உதவியுடன் திருகோணமலையில் முதலீட்டு வலயத்தை உருவாக்க ஆயிரம் ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், மகாவலி ஏ – பீ வலயங்களை அபிவிருத்தி செய்து நவீன விவசாயத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

பிங்கிரிய மற்றும் வடக்கில் புதிய முதலீட்டு வலயங்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு அதற்குத் தேவையான காணிகள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த வேலைத்திட்டங்கள் அடுத்த 05 வருடங்களில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

உங்கள் எதிர்காலத்திற்காகவே இதையெல்லாம் செய்கிறேன். உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக என்றுதான் சொல்ல வேண்டும்.

மேலும், ஹிங்குரக்கொட பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருவதோடு இந்த வருடம் ஹிங்குரக்கொட விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அதன் மூலம் இந்தப் பிரதேசத்துக்கு உள்ளக விமான சேவைகள் கிடைக்கும்.

மேலும், பொலனறுவை வரலாற்று முக்கியமான நகரத்தை சுற்றுலாப்

(மூன்றாம் பக்கம் பார்க்க)

# 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்வதில் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்!

## புளொட் தலைவர் சித்தார்த்தன் எம்.பி. கோரிக்கை




(கே.வசந்தன்)

13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்வதில் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என புளொட் அமைப்பின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற ரெலோவின் 11 ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்திய – இலங்கை ஒப்பந்தம் மூலம் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் இருக்கின்றது. அது போதும் எனக் கூறவில்லை. ஆனால், அதை ஏற்றுக்கொள்வதில் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எங்களுக்குள் பலர் அதை மறுக்கின்ற தன்மை இருந்தாலும் கூட இந்த 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு வருகின்ற அரசுகள் எல்லாம் எவ்வளவு பின்னடிக்கின்றது என்பதைக் கண்கூடாக காண்கின்றோம்.

இந்தநிலையில் இதை விட நாம் பெரிதாகப் பெறுவோம் என்று சொல்லி படிப்படியாக எங்களுடைய இனம் அதாவது வடக்கு – கிழக்கு தமிழர்கள் எண்ணிக்கையில் குறைந்து கொண்டு வருகின்றார்கள். இன்றும் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு வசதியாக கனடா விசா, இலண்டன் விசா கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த வருடத்தில் வடக்கு – கிழக்கில் இருந்து ஏறக்குறைய சுமார் 20 ஆயிரம் நாட்டை விட்டு சென்றுள்ளார்கள்.

ஆகவே, கையில் இருப்பதையாவது இறுக்கமாகப் பற்றி வடக்கு – கிழக்கைக் கட்டியெழுப்பும் முயற்சி எடுக்க வேண்டும். இது ஒரு ஜதார்த்தமான முடிவு. சரியான முடிவு எனச் சொல்லவில்லை. சரியான முடிவை நோக்கிச் செல்ல வேண்டும். அதன்போது இருப்பதை இறுக்க பற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான் உண்மையான நிலைப்பாடு.

எங்களைப் பொறுத்தவரை நாங்கள் 5 கட்சிகள் ஒற்றுமையாக ஜனநாயகத் தமிழ்த் தேசியகக் கூட்டனி என்ற பெயரில் இயங்கி வருகின்றோம். ஒவ்வொரு காலத்திலும் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்பட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு காரணங்களுக்காக அந்த ஒற்றுமை ஏற்பட்டுள்ளது. அதில 90 வீதம் தேர்தலுக்காகத்தான். ஆனால், நாங்கள் தேர்தலுக்காக ஒற்றுமைப் படவில்லை. தேர்தலுக்கு முன்னரே இது பற்றி பேசிக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நோக்கி நகர்வதற்காக ஒற்றுமையாக அமைக்கப்பட்ட அமைப்பு இது. தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய கட்சிகள் அனைத்தும் இதில் இணையக்கூடிய வகையில்தான் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஏனைய கட்சிகளும் இதில் வந்து இணைவார்கள். அந்த ஒற்றுமையின் மூலமே நியாயமான தீர்வைப் பெற முடியும். அதற்குத்தான் மக்கள ஆதரவு கிடைக்கும். அதன் மூலம் மக்களின் அபிலாஷைகளை அடைய முடியும்." – என்றார்.

# திகாம்பரம் அணியின் தேர்தல் ஆட்டம் ஏப்ரல் 28 தலவாக்கலையில் ஆரம்பம்

(ஆ.ரமேஷ்)

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மே தின விழா எதிர்வரும் ஏப்ரல் 28 ஆம் திகதி தலவாக்கலையில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்தப்படவுள்ளது என்று சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

வலப்பனை பிரதேசத்தில் இராகலை, வலப்பனை மற்றும் உடப்புஸ்ஸலாவ பிரதேச தொழிலாளர் தேசிய சங்க அங்கத்தவர்கள் உள்ளிட்ட மக்கள் சந்திப்பு இராகலை புறநெகும மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், மயில்வாகனம் உதயகுமார் ஆகியோருடன் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது உரையாற்றுகையிலேயே திகாம்பரம் எம்.பி. மேற்படி தகவலை வெளியிட்டார்.

"ஐந்து வருடங்களுக்குப் பிறகு தொழிலாளர் தேசிய சங்கம் உலக தொழிலாளர் தினமான மே தின விழாவை தலவாக்கலையில் நடத்தவுள்ளது.

இதை மே முதலாம் திகதி நடத்தாமல், ஏப்ரல் 28.04.2024 அன்று மே தினக் கூட்டம், பேரணியை நடத்தவுள்ளோம்.

மே முதலாம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கொழும்பில் மே தினக் கூட்டம் நடக்கவுள்ள நிலையில், அதற்கு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தலவாக்கலையில் ஏப்ரல் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ள மே தின விழாவில் சஜித் பிரேமதாஸ கலந்து கொள்வார்." – என்றும் திகாம்பரம் எம்.பி. கூறினார்.



இந்த மே தின நிகழ்வோடு தமது தேர்தல் பிரசார நடவடிக்கையையும் தொழிலாளர் தேசிய சங்கம் ஆரம்பிக்கவுள்ளது.

**புதிய மறுசீரமைப்புக்களின்**

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகளுக்காக இரவும் பகலும் திறந்து விடலாம். நமது கலாசார அழகுகளையும் நவீன நடனங்கள் மற்றும் உள்ளூர் உணவு மற்றும் பானங்களுடன் இணைத்து சுற்றுலாத் திட்டங்களைத் தயாரிக்க முடியும். இந்தச் செயற்பாடுகள் அனைத்தையும் நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

எனவே, நாடு எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதை இளைஞர்கள் தீர்மானிக்க வேண்டும். உங்கள் எதிர்காலத்தை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். உங்கள் எதிர்காலம் தொடர்பில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்." – என்றார்.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் பிரதி அமைச்சர் சந்திரசிறி சூரியாராச்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மின்னேரியா தொகுதி அமைப்பாளர் ஜகத் சமரவிக்ரம, யுனைடட் யூத் ஆலோசனை சபையின் தலைவர் சுதத் சந்திரசேகர, அதன் பணிப்பாளர் நாயகம் பிரசாத் அசங்க ரத்நாயக்க, தேசிய அமைப்பாளர் விஜித் அநுராத மற்றும் பொலனறுவை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவிலான இளைஞர், யுவதிகள் இந்தக் கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர்.

# நேற்றிரவு சீனா பறந்தார் தினேஷ்



ஐந்து நாட்கள் விசேட விஜயம் மேற்கொண்டு பிரதமர் தினேஷ் குணவர்தன சீனாவுக்குப் பயணமாகியுள்ளார்.

சீன அரசின் அழைப்பின் பேரில் சீனா சென்றுள்ள பிரதமர் தினேஷ் குணவர்தனவை சீன பிரதமர் லி கியாங் வரவேற்றார் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

டயினா ஈஸ்டன் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தின் ஊடாக அவர் நேற்றிரவு நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார்.

இதன்போது பிரதமருடன் 10 பேர் சீனாவுக்குப் பயணமாகியுள்ளனர்.




# களனிப் பல்கலைக்கழகத்தில் மாணவன் ஒருவர் உயிரிழப்பு

## நீதி கோரி சக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் அதன் நுழைவாயிலை மறித்து இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

களனிப் பல்கலைக்கழகத்தின் மாணவன் ஒருவர் திடீரென சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்தார்.

களனிப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான பிரிவில் கல்வி கற்கும் மொனராகலை பகுதியைச் சேர்ந்த மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

பல்கலைக்கழக விடுதியின் நிர்வாக அதிகாரிகளின் கவனக்குறைவினாலேயே மாணவன் உயிரிழந்தார் என்று மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த மாணவனுக்கு நீதி கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

# தனியார் காணியில் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு

**(எம்.எப்.எம். அலி)**

பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெயிகஸ்தலாவ பிரதேசத்தில் தனியார் காணியில் இருந்து ஆணொருவரின் இன்று காலை சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீடகப்பட்ட சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தை அடையாளம் காண்பதற்குப் பொது மக்களின் உதவியைப் பொலிஸார் கோரியுள்ளனர். மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மைத்திரி இன்று...**

முன்னிலையாகியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னாலுள்ள உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பது தனக்குத் தெரியும் என மைத்திரிபால அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்தொன்றை வெளியிட்டிருந்தார்.

நீதிமன்றம் உத்தரவிடுமாயின் குறித்த தகவல்களைத் தான் இரகசியமாக நீதிபதிகளிடம் வழங்கத் தயார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் அண்மையில் அவர் தெரிவித்த கருத்துக்கள் குறித்து வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்றுள்ளார்.

---

**மக்கள் மனதை...**

ஆனால், எந்தத் தேர்தல் நடந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றிநடைபோடும். எமது கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவே அடுத்த ஜனாதிபதியாகவும் வருவார்.

ரணில் விக்கிரமசிங்க கட்சி சார்பு வேட்பாளர் இல்லாமல் பொது வேட்பாளராகவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடச் சந்தர்ப்பம் உண்டு.

அவர் எந்த வழியில் போட்டியிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே பெருமை. எமது கட்சிக்கு நாள்தோறும் மக்களின் ஆதரவு அதிகரித்து வருகின்றது. அதே வேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான மூவின மக்களின் ஆதரவும் பெருகி வருகின்றது." – என்றார்.



# சுகாதார சேவையில் ஏற்படுத்தப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பில் கலந்துரையாடலை நடத்துவது அவசியம்!

## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

நவீன மருத்துவ சேவைகளுக்கு உகந்த வகையில் எமது நாட்டின் சுகாதார சேவையில் ஏற்படுத்தப்படவுள்ள புதிய மாற்றங்கள் தொடர்பில் விரிவான கலந்துரையாடலை நடத்துவது அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற ‘தலைமைத்துவம் மற்றும் திறன் மேம்பாடு’ என்ற தலைப்பிலான ஒரு நாள் செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் காலனித்துவக் காலத்தில் இருந்து இலவச மருத்துவ முறைமை காணப்படுகிறது. அதனை முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. மேலும், அந்தக் கடந்த கால அனுபவங்களுடன் நாட்டில் தரமான மற்றும் உயர்தர சுகாதார சேவைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

எதிர்வரும் 10 முதல் 15 ஆண்டுகளுக்குள் இந்தப் புதிய மாற்றங்களை முன்னெடுப்பதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்காகச் சுகாதாரத் துறையிலுள்ள அனைவருடனும் பரந்த உரையாடலை நடத்த எதிர்பார்க்கின்றோம்.

மேலும், அதற்கான யோசனைகளையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

இந்தக் கலந்துரையாடல்கள் அனைத்தையும் அரசியல் மயப்படுத்தாமல் தர்க்க ரீதியாக மேற்கொள்வது முக்கியம்.- என்றார்.




# தனியார் கல்வி நிலையத்தில் மோதல்; 9 மாணவர்கள் வைத்தியசாலைகளில்

குருநாகல், இப்பாகமுவ பிரதேசத்தில் தனியார் கல்வி நிலையத்தில் நேற்று இரவு இடம்பெற்ற மோதலில் 05 மாணவிகளும் 04 மாணவர்களும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று கொகரெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த ஒரு மாணவியும் மூன்று மாணவர்களும் குருநாகல் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிலும் மேலும், 04 மாணவிகள் மற்றும் ஒரு மாணவர் பொல்கொல்ல பிரதேச வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இப்பாகமுவ, பக்மீகொல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த தனியார் கல்வி நிறுவனத்தில் கல்விப் பொதுத் தராதர பரீட்சையில், சித்தி பெறாத மாணவர்கள் கல்வியைப் பெற்று வருவதாகவும், இதன்போதே தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

எனினும், மோதலுக்கான காரணம் இதுவரை தெரிய வரவில்லை எனவும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொகரெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேர்தல் மறுசீரமைப்பு சரிவராது

நாடாளுமன்றத் தேர்தல் முறையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும் ரணில் அரசாங்கத்தின் முயற்சி அதன் ஆரம்ப அடிகளுடன் சறுக்கும் என்றே தோன்றுகின்றது.

மாவட்ட ரீதியில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் நாடாளு மன்றுக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறைமை வந்த நாள் முதலாகவே - கடந்த 35 ஆண்டுகளாகவே - இந்த முறைமை அவ்வப்போது கடும் விமரிசனத்துக்கும் குறை கூறலுக்கும் உள்ளாகியே வந்துள்ளாது.

அதுபோலவே, இந்த நாடாளுமன்றத் தேர்தல் முறையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும் எத்தனங்களும் அவ்வப் போது - காலத்துக்குக் காலம் - முன்னெடுக்கப்பட்டே வந்துள்ளன.

எனினும் அவை எவையும் வெற்றியளிக்கவில்லை. அந்த முயற்சிகள் கணிசமான அளவு கூட முன்னேறவில்லை. பல தடவைகள் வெறும் பேச்சளவுடன் அவை ஸ்தம்பித்துப்போயின.

ஆனால் இப்போதைய அரசின் முயற்சி அமைச்சரவையும் தாண்டி வந்துள்ளது. எனினும் அதன் கதியும் கூட முன்னைய முயற்சிகள் போன்று அவமாய்த்தான் முடியும் என்பது ஆரம்பத்திலேயே உறுதியாகி விட்டது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தல் முறையில் மறுசீரமைப்புச் செய்வதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றதுடன், சட்டத்தை வரையவும், ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தவும் விசேட குழுக்களும் நியமிக்கப்பட்டன.

இந்த நிலையில், அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தேர்தல்முறை மறுசீரமைப்புக்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் தொகுதிகள் வாரியாக அல்லாமல் மலையகம் முழுவதும் பரந்து வாழுகின்றனர். தற்போதைய மாவட்ட ரீதியான விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மூலம் ஒரு சில நாடாளுமன்றப் பிரதிநிதிகளை பொதுத் தேர்தல் தோறும் அவர்களால் உறுதியாகப் பெறமுடிகின்றது. இதுவே தொகுதி வாரித் தேர்தல் என்றாகிவிட்டால் எந்தத் தேர்தல் தொகுதியிலும் தனித்துப் பெரும்பான்மையாக வசிக்காத இந்திய வம்சாவளித் தமிழர்கள் எந்தத் தொகுதியிலும் வெல்ல முடியாத நிலையே ஏற்படும். ஆகையால் இந்தத் தேர்தல் முறை மறுசீரமைப்பை இ.தொ.கா. எதிர்ப்பதில் நியாயம் உண்டு.

ஏனைய மலையகத் தமிழ்க் கட்சிகளும் கூட இதே நிலைப்பாட்டில்தான் உள்ளன.

பெரும்பாலும், முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடும் கூட இதுதான். அதனால் அவையும் உத்தேச தேர்தல் முறை மறுசீரமைப்புகளை எதிர்க்கும் என்றே தெரிகின்றது.

அதேபோன்று எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ் முற்போக்குக் கூட்டணி உட்பட பிரதான எதிர்க்கட்சிகள் அனைத்தும் அரசாங்கத்தின் இந்த முயற்சிக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

தேர்தல் முறை மாற்றத்தை மேற்கொள்ளும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டால் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என சிவில் அமைப்புகளும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் புதிய நாடாளுமன்றத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்கும் உத்தேச அரசமைப்பு திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தேசிய மக்கள் சக்தி அனுமதிக்காது என அதன் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கனடாவின் டொரொன்டோவில் இலங்கை சமூகத்தினருடனான சந்திப்பில் பேசிய அவர், "அரசாங்கம் ஆட்சியை இழக்கப் போவதாக கருத்துக் கணிப்புகள் கூறுவதால் இந்தத் தருணத்தில் ஒரு தேசியத் தேர்தலைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அதிகாரத்தை மக்களிடம் ஒப்படைக்க அவர்கள் பயப்படுகிறார்கள். அதனால்தான் தேர்தலில் தயக்கம் ஏற்பட்டுள்ளது. புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்த அரசாங்கம் இப்போது அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்துள்ளது. இதனைச் செயல்படுத்த அரசாங்கத்திற்கு எந்த வாய்ப்பையும் வழங்க மாட்டோம். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் அதை செய்ய அனுமதிக்க மாட்டோம்." எனக் கூறியுள்ளார்.

ஆக, நாடாளுமன்றத் தேர்தல் முறையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும் ரணில் அரசாங்கத்தின் முயற்சி ஆரம்ப அடிகளோடு ஸ்தம்பிக்கும் என்பது நிச்சயம்.




# கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டம்!

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்கு முறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் இன்று (25) திங்கட்கிழமை போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் முன்பாக பொது மக்கள் பதாதைகளை தாங்கிய வண்ணம் அங்கு தங்களது உரிமைக்காக போராட்டத்தை ஆரம்பித்து இருக்கின்றார்கள் .

உதவி அரச அதிபர் பிரிவாக செயல்பட்டு வந்த இந்த அலுவலகம் 1988 களில் தனியான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டது.

தொடர்ந்து 1993 இது அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருட காலமாக இயங்கி வருகின்றது. இருந்த போதிலும் ஒருசில அரசியல்வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளைத் தொடர்ச்சியாக பிரயோகித்து வருகின்றனர்.

இதனை எதிர்த்து பொது மக்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம்பெற்று-வரும் சூழ்ச்சிகளையும் நிர்வாக அடக்குமுறைகளையும் கணடித்து நேற்று பிரதேச மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

திட்டமிடப்பட்டு கல்முனை வடக்கு பிரதேய செயலக உரிமைகளை ஒடுக்கும் நிர்வாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக் கொண்டு இருக்க முடியாது. அரசு இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை எமது அமைதிப் போராட்டம் தொடரும் என மக்கள் தெரிவித்தனர்.

# திருமலைக்கு சுற்றுலா சென்ற வெளிநாட்டவர் உயிரிழப்பு!



பிரான்ஸ் நாட்டில் இருந்து திருகோணமலைக்குச் சுற்றுலா வந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி 44 பேருடன் இலங்கைக்கு சுற்றுலா வந்தவர்களில் ஒருவரே இன்று (25) அதிகாலை உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மைக்கல் மார்சல் என்ற 57வயதுடையவராவார்.

மனைவி உட்பட 44 பேருடன் சுற்றுலா வந்தத அவர் நேற்றிரவு (24) திருகோணமலை அலஸ் தோட்டம் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கி இருந்த போது சுகவீனமுற்றார் என்றும் இதனை அடுத்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்றும் தெரிய வருகின்றது.

இந்த நிலையில், உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை உப்பு வெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தென்கிழக்குப் பல்கலையில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு!







(நூருல் ஹுதா உமர்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாய்ந்தமருது பயிற்சி நிலையத்தில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதல்கள் வழங்கும் நிகழ்வு இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எச்.யூ. சுசந்தவின் நெறிப்படுத்தலில் நேற்று தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் பசின்டு குணரத்ன, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் மற்றும் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்துகொண்டனர்.

இவர்களுடன் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனிபா, அம்பாறை பெலிஸ் அதிகாரி ஜெ.எச். எம்.என். ஜெயபத்மா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான சமிக்க அமரசிங்க, இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை பிராந்திய பிரதிப்பணிப்பாளர் கங்கா சகரிக்க தமயந்தி, கிழக்கு மாகாண பிரதிப் பணிப்பாளர் மஜீட், இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாய்ந்தமருது பயிற்சி நிலையத்தின் பொறுப்பாளரும் பிரதிப்பணிப்பாளருமான ஏ.ஹமீர் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் சிங்களம் உள்ளிட்ட கற்கைநெறிகளை பூர்த்தி செய்த 300 மாணவர்கள் தாங்களுக்கான சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.





# மாணவர்களுக்குக் கற்றல் உபகரணம்



(த.சுபேசன்)

உடுவில் கிழக்கு மற்றும் இணுவில் கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட 30 மாணவர்களுக்கு தலா நான்காயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கனடா நாட்டில் வசிக்கும் புலம்பெயர் உறவுகளான சிவசங்கர், கஜன், லலிதா, கஜேந்திரன் மற்றும் சுதாகர் ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் இந்த உதவித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.




# மலையகத்தில் நவநாதர் சித்தர் ஆலயத்தில் பங்குனி உத்தரம்!



(ஆ.ரமேஸ்)

மலையகத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவ ஆலயங்களில் ஒன்றான கெட்டபுலா குயின்ஸ்பேரி தோட்டத்தில் அமைந்துள்ள நவநாதர் சித்தர் சிவ ஆலயத்தில் 122 ஆவது வருடாந்த பங்குனி உத்தர சிறப்பு விழா நேற்று (24) இடம்பெற்றது.

நவநாதர் சித்தர் 24.03.1902 ஆம் ஆண்டு சமாதியடைந்தார். அதே தினத்தில் இந்த முறை 24.03.2024 ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்திரம் விழா வெகு விமர்சையாக இடம்பெற்றது. சித்தர் சமாதியில் எழுந்தருளிய சிவலிங்கத்துக்கு விசேட பூசைகள் இடம்பெற்றன.

அத்துடன் இந்த சிவாலத்தின் பகுதியாக அமைந்துள்ள ஒரே கல்லில் உருவம் கொண்டுள்ள வள்ளி தெய்வானை சமேதர முருகனுக்கு பால்குட பவனி மற்றும் பறவைக் காவடி ஊர்வலம் என்பனவும் இடம்பெற்றன. ஊர் மக்களின் பங்குனி உத்தர சிறப்புப் பூசைகளும் இடம்பெற்றன.



# பா.ஜ.க. வேட்பாளர் பட்டியல் வெளியீடு: இமாச்சலில் நடிகை கங்கனா போட்டி



மக்களவை தேர்தலில் பா.ஜ.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் கொண்ட 5 ஆவது பட்டியல் நேற்று வெளியாகியுள்ளது. இதில பாலிவுட் நடிகை கங்கனாவின் பெயரும் இடம்பெற்றுள்ளது.

பா.ஜ.க. சார்பில் மக்களவை தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்களின் பெயர்களை இதுவரை நான்கு பட்டியல் களாக அக்கட்சி வெளியிட்டுள்ளது. இந்த நிலையில் நேற்று ஐந்தாவது வேட்பாளர் பட்டியலை பா.ஜ.க. தலைமையகம் வெளியிட்டுள்ளது.

இதில் ஆந்திரா, பிஹார், கோவா, குஜராத், ஹரியானா, இமாச்சல பிரதேசம், ஜார்க்கண்ட், கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களுக்கான 111 வேட்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இதில் இமாச்சல பிரதேசத்தின் மாண்டி தொகுதியில் நடிகை கங்கனா ரனாவத் போட்டியிடுகிறார். இது குறித்து கங்கனா தனது எக்ஸ் பதிவில்,

"என் அன்புக்குரிய பாரதிய ஜனதா கட்சிக்கு எப்போதும் எனது நிபந்தனையற்ற ஆதரவு உண்டு. இன்று பா.ஜ.கவின் தேசியத் தலைமை எனது பிறந்த இடமான இமாச்சலப் பிரதேசத்தின் மாண்டி தொகுதியில் என்னை வேட்பாளராக அறிவித்திருக்கிறது.

கட்சியில் அதிகாரபூர்வமாக இணைந்ததை பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் உணர்கிறேன். நான் ஒரு தகுதியான காரியகர்த்தாவாகவும் நம்பகமான மக்கள் சேவகியாகவும் செயல்பட ஆவலுடன் காத்திருக்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மீரட் தொகுதியில் மகாபாரதம் தொடரில் ராமராக நடித்த அருண் கோவில் பா.ஜ.க. சார்பில் களமிறங்க உள்ளார்.

# விஜய பிரபாகரன் மகன் போன்றவர்

## நடிகை ராதிகா சரத்குமார் கருத்து



விருதுநகர் தொகுதியில் தே.மு.தி.க. சார்பில் போட்டியிடும் விஜய பிரபாகரன் தனக்கு மகன் போன்றவர் என்று பா.ஜ.க. வேட்பாளர் ராதிகா சரத்குமார் தெரிவித்தார்.

விருதுநகர் மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட அருப்புக்கோட்டை, விருதுநகர், சாத்தூரில் பா.ஜ.க. வேட்பாளர் அறி முகக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் பா.ஜ.க. கிழக்கு மாவட்டத் தலைவர் பாண்டுரங்கன் தலைமை வகித்து, விருதுநகர் மக்களவைத் தொகுதி பா.ஜ.க. வேட்பாளராக போட்டி யிடும் நடிகை ராதிகாவை அறிமுகம் செய்துவைத்தார். அவருடன் அவரது கணவரும் நடிகருமான சரத்குமாரும் உடனிருந்தார்.

வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில், பா.ஜ.க. வேட்பாளர் நடிகை ராதிகா பேசுகையில்,

"பாரதிய ஜனதா கட்சியினரின் ஆர்வத்தையும் வெறியையும் பார்க்கும் போது மிகவும் சந்தோசமாக உள்ளது. பணியாற்றுபவர்களை மரியாதையாக நடத்தக்கூடிய கட்சி பாரதிய ஜனதா கட்சி. சமுதாயம் நன்றாக இருக்க வேண்டும், பெண்களுக்கு உரிமை கிடைக்க வேண்டும், தன்னம்பிக்கை இருக்க வேண்டும், சுயமரியாதையோடு வாழ வேண்டும். வேலை வாய்ப்பு இருக்க வேண்டும். அதற்கு ஒரே நம்பிக்கை மோடி தான்.

இந்த தொகுதியில் காங்கிரஸ் சார்பில் நிற்கும் மாணிக்கம் தாகூர் இந்த தொகுதிக்கே பெரும்பாலும் வரு வதில்லை என்று மக்கள் கூறுகிறார்கள். விஜயகாந்தின் மகன் எனக்கும் ஒரு மகன் போன்றவர். அவர் எனது மகளுடன் படித்தவர். அவர் நன்றாக இருக்க வேண்டும். எல்லோருக்கும் வேலைவாய்ப்பும் பாதுகாப்பும் இருக்க வேண்டும். சிவகாசி பட்டாசு தொழிலில் இனிமேல் ஒரு உயிரிழப்பும் இருக்கக் கூடாது. அதற் கான திட்டப் பணிகளை முன்னெடுப்போம்." - என்றார்.

# தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு வெற்றி

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவிப்பு

இந்த தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் நமது வேட்பாளர்கள் வெற்றி பெற நாம் அனைவரும் அரும்பாடு படவேண்டும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. கூட்டணி கட்சி வேட்பாளர்கள் அறிமுகப் பொதுக்கூட்டம் நேற்று திருச்சியில் நடைபெற்றது. இதில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி உரையாற்றுகையில்,

"தமிழகத்தில் மூன்று முக்கிய கட்சிகள் இந்த தேர்தலை சந்திக்கின்றன. ஒன்று அ.தி.மு.க, தி.மு.க. மற்றும் பா.ஜ.க. ஆனால் தேர்தலில் போட்டி என்று வரும்போது அது அதிமுகவா அல்லது தி.மு.கவா என்றுதான். அதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். இந்த தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் நமது வேட்பாளர்கள் வெற்றிபெற நாம் அனைவரும் அரும்பாடு படவேண்டும்.



தி.மு.க. தலைவர் கடந்த இரண்டு நாட்களாக பல்வேறு கூட்டங்களில் பேசிக் கொண்டிருக்கிறார். அவற்றில் ஒன்று பிரதமரை விமர்சிப்பார். அதைப் பற்றி நமக்கு கவலை இல்லை. மற்றொன்று என்னைப் பற்றி விமர்சிப்பார். இதைத் தவிர அவர் வேறு எதுவும் பேசுவதில்லை. அவர் ஒரு பொம்மை முதலமைச்சர்.

தமிழ்நாட்டை நாங்கள் கெடுத்து விட்டோம் என்று ஸ்டாலின் சொல்கிறார். எம்.ஜி.ஆர். இந்த மண்ணில் பிறந்த ஒரே காரணத்தால் மட்டுமே உங்கள் குடும்பத்திடம் இருந்து தமிழ்நாடு தப்பியது. இன்றைக்கும் எந்த இடத்துக்கு சென்றாலும் அதிமுக ஆட்சி பொற்கால ஆட்சி என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஒரு செங்கல்லை மூன்று ஆண்டுகளாக காட்டிக் கொண்டிருக்கிறார். முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் கோரிக்கையால் மட்டுமே மத்திய அரசு மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனையை கொண்டு வந்தது. இந்த செங்கல்லை நாடாளுமன்றத்தில் காட்டியிருக்க வேண்டும். ரோட்டில் காட்டி எந்த பிரயோஜனமும் இல்லை. விளம்பரத்துக்காக செங்கல்லை காட்டுகிறார் உதயநிதி." – என்றார்.

# நட்சத்திர வேட்பாளர்களுடன் விருதுநகரில் மோதும் காங்கிரஸ்

தமிழ்நாட்டிலுள்ள 39 மக்களவை தொகுதிகள் மற்றும் தென் மாவட்டத்திலுள்ள தொகுதியிலும் விருதுநகர் முக்கியமானது.

இந்த மக்களவை தொகுதியில் விருதுநகர், சாத்தூர், அருப்புக்கோட்டை, சிவகாசி மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள திருமங்கலம், திருப்பரங்குன்றம் ஆகிய சட்டப்பேரவை தொகுதிகள் இடம்பெறுகின்றன.

விருதுநகர் மக்களவை தொகுதிக்கு உட்பட்ட அருப்புக் கோட்டை சட்டமன்ற தொகுதியில் 1977இல் எம்.ஜி.ஆர். வெற்றி பெற்று முதல்வரானார். இது போன்ற காமராஜர் சாத்தூர் தொகுதியை வென்று முதல்வரான வரலாறும் இந்த மக்களவை தொகுதிக்கு உண்டு. காங்கிரஸ், அ.தி.மு.க. கட்சி தலைவர்களை உருவாக்கிய, இத்தொகுதியை இந்த முறை நட்சத்திர அந்தஸ்தையும் பெறும் வகையில் களம் உள்ளது.

ஏற்கெனவே, காங்கிரஸ் 3 முறை வெற்றிகண்ட நிலையில், இக்கட்சியில் 2 முறை வென்ற மாணிக்கம் தாகூருக்கே மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தேர்தலையொட்டி, தங்களது சமத்துவ மக்கள் கட்சியை பா.ஜ.கவுடன் இணைத்த சரத்குமாரின் மனைவியும், பிரபல நடிகையுமான ராதிகா பா.ஜ.கவின் ஆதிகாரபூர்வ வேட்பாளராக களம் இறங்கியுள்ளார்.



இந்தத் தொகுதியை 4 முறை தக்க வைத்த அ.தி.மு.க, இம்முறை தங்களது கூட்டணி கட்சியான தே.மு.தி.கவுக்கு விருதுநகரை ஒதுக்கியது. மறைந்த விஜயகாந்த் மகன் விஜயபிரபாகரன் களம் இறங்கியுள்ளார்.

இதன்மூலம் இத்தொகுதியின் மீது முக்கிய எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. விஜயகாந்தின் சொந்த ஊரான ராமானுஜபுரம் அருப்புக்கோட்டை தொகுதியில் வருவதாலும், தேர்தலுக்கு முன்னதாக விஜயகாந்த் மறைந்ததாலும் அவரது அனுதாப அலை விஜயபிரபாகரனுக்கு வெற்றி வாய்ப்பை தேடி தரலாம் என்ற எதிர்பார்ப்பில் தேர்தல் பணியாற்றுவதாக தே.மு.தி.க. நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

சமத்துவ மக்கள் கட்சியை கலைத்து, பா.ஜ.கவுடன் இணைப்பு ஒருபுறம் இருந்தாலும், நட்சத்திர வேட்பாளர், சரத்குமாரின் சமூக பின்னணி வாக்குகள் என, ராதிகாவுக்கு வெற்றிக்கு கூடுதல் பலம் கிடைக்கும் என பா.ஜ.கவினர் எதிர்பார்க்கின்றனர்.

2 நட்சத்திர வேட்பாளர்களுக்கு, திரை நட்சத்திரங்கள் பிரச்சாரத்திற்கு வாய்ப்புள்ளது என்ற போதிலும், இவர்களுக்கு இணையான பிரச்சாரத்தை மேற்கொள்ளும் சூழலுக்கும் காங்கிரஸ் வேட்பாளரும் தயாராகும் சூழலும் உள்ளது.




| | |
|---|---|
| **ROASTED CHILLI POWDER**<br>(Includes 14 spices)<br>250 G - 950/=, 100G - 395/= | **SPECIAL CUMIN SEED POWDER**<br>100G - 560/= |
| **UNROASTED CURRY POWDER**<br>250G - 850/=, 100G - 380/= | **CORIANDER POWDER**<br>100 G NEW - 190/= |
| **CHILLI POWDER**<br>100G - 290/= | **BLACK PEPPER POWDER**<br>100 G |

**FREE DELIVERY TO SPECIFIC AREAS**

**DELIVERY WILL BE CHARGED TO OTHER AREAS**



# காசாவிலுள்ள வீடொன்றின் மீது குண்டுத் தாக்குதல் 7 பேர் பலி!

காசாவிலுள்ள வீடொன்றின் மீது இஸ்ரேலிய படைகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் குறைந்தது 7 பாலஸ் தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

மத்திய காசாவில் உள்ள டெய்ர் அல்-பலாஹ் என்ற இடத்திலுள்ள ஒரு வீட்டின் மீதே இஸ்ரேலியப் படைகள் இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், காசா நகரின் தென் கிழக்கு பகுதியில் உதவிக்காக காத்திருந்த பொதுமக்களை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய துப்பாக் கிச் சூட்டில் 19 பாலஸ்தீனர்கள் கொல்லப் பட்டனர் என காசாவின் சுகாதார அமைச் சின் ஊடக அலுவலகம் தெரிவித்துள்ளது.





# நைஜீரியாவில் கடத்தப்பட்ட 300 மாணவர்களும் விடுவிப்பு

நைஜீரியாவில் கடத்தப்பட்ட 300 பாடசாலை மாணவர்களும் இரண்டு வாரங்களுக்கு பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 7ஆம் திகதி குறித்த மாணவர்கள் கடத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், அவர்களை மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வந்தனர்.

அந்த பணிகளின் போது மாணவர் கள் பாதுகாப்பான முறையில் மீட்கப் பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள் ளது.

கடந்த காலங்களாக நைஜீரியாவின் வடமேற்கு பகுதி மற்றும் மத்திய பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஆயுததாரிகள் கடத்தல் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப் பிடத்தக்கது.







# காசா மருத்துவமனைகளை முற்றுகையிடும் இஸ்ரேல்

இஸ்ரேலியப் படைகள் காசாவில் உள்ள மேலும் இரண்டு மருத்துவமனைகளை முற்றுகையிட்டுள்ளன என செய்திகள் வெளியாகியுள்ளன.


பலத்த துப்பாக்கிச் சூட்டின் கீழ் மருத்துவக் குழுக்களைப் பின்தொடர்ந்து அந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக பலஸ்தீனிய செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, காசாவின் முக்கிய அல் ஷிஃபா மருத்துவமனையில் தொடர்ச்சியான மோதல்களில் 480 ஹமாஸ் போராளிகளைச் சிறைபிடித்துள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

அதேவேளை, ஐந்து மாதங்களுக்கும் மேலாக போர் மூளும் பலஸ்தீனப் பகுதியில் உள்ள மருத்துவமனைகளை ஹமாஸ் போராளிகள் தளங்களாகப் பயன்படுத்துவதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

அது தொடர்பான புகைப்படங்களையும் காணொலிகளையும் வைத்து இஸ்ரேல் பாதுகாப்பு படை அதனை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தெற்கு நகரமான கான் யூனிஸில் உள்ள அல்-அமல் மருத்துவமனையை சுற்றி இஸ்ரேலியப் படைகள் செயல்படத் தொடங்கியதையடுத்து அப்பகுதியில் ஹமாஸ் போராளிகள் சிவில் உள்கட்டமைப்பை பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதை இஸ்ரேல் கண்டறிந்துள்ளது.




# பப்புவா நியூ கினியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

பப்புவா நியூ கினியாவின் வடக்கே தொலைதூர பகுதியில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

அம்புந்தி பகுதியில் இருந்து கிழக்கு-வடகிழக்கே 32 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்ட இந்நி லநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.9 ஆக பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வருடம் ஏப்ரலில் இதுபோன்ற சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஒன்று பப்புவா நியூ கினியாவில் பதிவாகியது .

அந்த நிலநடுக்கத்தினால் 07 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 04

கனடா முரசு

திங்கட்கிழமை 25/03/2024

## மகிழ்சியான நாடுகள் பட்டியலில் கனடா 15ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டது

2024ஆம் ஆண்டுக்கான உலகின் மகிழ்சியான நாடுகள் பட்டியலில் கனடா 15ஆவது இடத்துக்கு இறங்கியுள்ளது. சமீபத்தில், உலக மகிழ்ச்சி அறிக்கை வெளியிடப்பட்ட

C2



# கனடாவில் தற்காலிகமாக வதிகின்றவர்களுக்கு நிரந்தர வதிவிட உரிமைக்கு அதிக சந்தர்ப்பம்

**கனடாவில் தற்காலிகமாக வதிவோருக்கு நிரந்தர வதிவிட உரிமைக்கான கூடுதல் சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளது.**

**கனடிய குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.**

**ஏற்கனவே கனடாவில் தற்காலிகமாக வதியும் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு நிரந்தர வதிவுரிமை வழங்கும் போது கூடுதல் சந்தர்ப்பம் அளிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.**

தொழில் தகமை, பிரெஞ்சு மொழித் திறன் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் தற்காலிகமாக வதிவோ ருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளது.

தொழில் மற்றும் கல்வி நோக்கில் கனடாவில் தற்காலிகமாக வதிவோருக்கு துரித கதியில் நிரந்தர வதிவுரிமைக் கோரிக்கையைப் பரிசீலனை செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# கனடாவில் சிறுவனுக்கு வைன் விற்ற பிரபல நிறுவனமொன்றுக்கு அபராதம்

கனடாவில் சிறுவன் ஒருவனுக்கு வைன் விற்பனை செய்த பிரபல நிறுவனமொன்றுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் முன்னணி பல்பொருள் விற்பனை சங்கிலி நிறுவனங்களில் ஒன்றான லொப்லொவ் நிறுவனத்துக்கே அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தமது நிறுவனத்தின் பணியாளர் ஒருவர் 16 வயது சிறுவனுக்கு வைன் விற்பனை செய்தமையை அந்த நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தின் சர்ரே பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுவனுக்கு வைன் விற்பனை செய்த குற்றத்திற்காக ஏழாயிரம் டொலர்கள் அபராதம்

C2









## இந்தியக் குடும்பம் குளிரில் உறைந்து பலியான சம்பவம்:

# ஆள்கள் கடத்தல் தொடர்பாக இரண்டு பேர் மீது குற்றச்சாட்டு

கனடா - அமெரிக்க எல்லையில் குழந்தைகள் உட்பட இந்தியக் குடும்பம் ஒன்று குளிரில் உறைந்து பலியான சம்பவம் நினைவிருக்கலாம்.

அச்சம்பவம் தொடர்பில் இருவர் மீது தற்போது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 19ஆம் திகதி, இந்தியாவின் குஜராத்தி லுள்ள Dingucha என்ற கிராமத் தைச் சேர்ந்த, ஜகதீஷ் பட்டேல் (39), அவரது மனைவி வைஷாலி (37), மகள் விஹாங்கி (13) மற்றும் மகன் தார்மிக் (3) ஆகியோர் அடங்கிய குடும்பம், அமெரிக்காவுக்குள் நுழையும் முயற்சி யின்போது, கனடா அமெரிக்க எல்லையில் குளிரில் உறைந்து பரிதாபமாக பலியானது.

இந்தத் துயர சம்பவம் தொடர்பாக, அமெரிக்க அதிகாரிகள், மேலும் இருவர் மீது தற்போது குற்றச்சாட்டுகள் பதிவு செய்துள்ளார்கள். ப்ளோரிடாவைச் சேர்ந்த Steve Shand of Deltona மற்றும் ப்ளோரிடாவில் வாழும் இந்தி யரான Harshkumar Ramanlal Patel ஆகிய இருவர் மீதும்தான் தற்போது குற்றச் சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த இருவர் மீதும், அந்நியர்களை அமெரிக்காவுக்குள் கடத்தும் முயற்சியில் அவர்களுக்குக் காயம் ஏற்படுத்தியமை, உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தியமை, தனிப்பட்ட முறையிலான பண மற்றும் பிற ஆதாயங்களுக்காக அவர்களைக் கடத்த உதவியது முதலான குற்றச் சாட்டுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இதற்கிடையில், இந்த வழக்கில் தொடர்புடையவர் என இந்திய அதிகா ரிகளால் கூறப்படும் Fenil Patel என்பவர் மீது கனடா அரசு எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. அவர் ரொரன்றோவுக்கு வெளியே சுதந்திரமாக தனது வீட்டில் வசித்துவருகிறார்.

ஊடகவியலாளர்கள் அவரது வீட்டுக்கும் முன் நின்றுகொண்டு அவரி டம் கேள்வி எழுப்பியபோது, அவர் எந் தப் பதிலும் கூறாமல் அமைதியாக வீட்டுக்குள் சென்றுவிட்டார் என்று கூறப்பட்டது.

### கனடாவில் சிறுவனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

இள வயதினருக்கு மதுபானம் விற்பனை செய்யப்படுகின்றதா என்பது குறித்து கண்காணிக்கப்பட்டுள்ளது.

இதன் போது வைன் கொள்வனவு செய்த 16 வயது சிறுவனிடம் ஆள் அடை யாள ஆவணங்களை காசாளர் கோர வில்லை எனவும், குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் குறித்த நிறுவனம் மீது இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

### மகிழ்ச்சியான நாடுகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் பின்லாந்து ஏழாவது முறையாக முதலிடத்தைத் தக்கவைத் துக்கொண்டுள்ளது. அமெரிக்கா 15ஆவது இடத்திலிருந்து 23ஆவது இடத்துக்கு சறுக்கியுள்ளது, பிரித்தா னியா 20ஆவது இடத்தில் உள்ளது.

உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில், கனடா 13ஆவது இடத்தி லிருந்த நிலையில், தற்போது அது கோஸ்டா ரிக்கா, குவைத் மற்றும் ஆஸ்திரியா போன்ற நாடுகளைத் தாண்டி, 15ஆவது இடத்துக்கு இறங்கி யுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக, 30 வயதுக் குக் கீழுள்ளவர்கள், 10 அல்லது 12 ஆண்டுகளுக்கு முன்னிருந்ததைவிட மகிழ்ச்சி குறைந்தவர்களாக ஆகியுள்ளார் கள் என்று கூறும் உலக மகிழ்ச்சி அறிக்கை ஆசிரியர்களில் ஒருவரான கனேடிய பொருளாதாரவியல் நிபுணர் John Helliwell, அதனால்தான் கனடாவும் அமெரிக்காவும் உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் கீழிறங்கிவிட்டன என்கிறார்.

அதே நேரத்தில், 60 வயதுக்கு மேலுள் ளவர்களின் மன நிலையில் எந்த மாற்றமும் இல்லை என்கிறார் அவர்.

# அரசியல்வாதிகளுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தவறான, புனையப்பட்ட செய்திகளால் பெருக்கம்




தனிப்பட்ட மனக்குறைகள் மற்றும் தவறான தகவல் அல்லது வேண்டுமென்றே பொய்களால் தூண்டப்பட்ட தீவிரவாதக் கதைகள் காரணமாக, அரசியல்வாதிகளுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் பெருகி, அவை இயல்பானவையாக மாறிவிட்டன எனப் புதிதாக வெளியிடப்பட்ட உளவுத்துறை அறிக்கை எச்சரிக்கிறது.

தேர்தலைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட கூட்டாட்சி பணிக்குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை, கனேடிய வன்முறை தீவிரவாத நிலப்பரப்பில் சதி கோட்பாடுகளின் பெருக்கம், மாநிலத்தின் ஒருமைப்பாடு மற்றும் அரசியல் துருவமுனைப்பு ஆகியவற்றில் நம்பிக்கையின்மை அதிகரித்து வருவதாகக் கூறுகிறது.

அடிப்படையற்ற கோட்பாடுகள், தவறான தகவல்கள் போன்றவை ஒன்லைன் பயனர்கள் மூலம் அதிக பார்வையாளர்களுக்குப் பரவி, அறிவியல், அரசாங்க அமைப்புகள் மற்றும் பாரம்பரிய அதிகார அமைப்புகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் பரந்த விவரிப்பு வலைப்பின்னல்களை வெளிப்படுத்துகின்றன என்று அறிக்கை கூறுகிறது.



# குயின்ஸ் பூங்காவிற்கு வெளியே யூதர்களுக்கு ஆதரவுக் கூட்டம்!

டொறண்டோ,மார்ச்25

வானளாவிய யூத எதிர்ப்புக்கு மத்தியிலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை குயின்ஸ் பூங்காவிற்கு வெளியே நூற்றுக்கணக்கான மக்கள் யூத சமூகத்துடன் தமது ஒற்றுமையை வெளிக்காட்ட ஒன்று கூடினர்.

சர் வதேச மகளிர் மாதத்தின் பின்னணியில், 'கனடாவில் வெறுப்புக்கு இடமில்லை என்ற செய்தியை எடுத்துரைக்கும் அவசியத்தின் நோக்கத்தில்', கனேடிய பெண்கள் அமைப்பால் 'எல்லா தேசங்கள் மற்றும் மதங்களையும் சேர்ந்த பெண்களை இணைத்து' இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த பேரணியில் ஒரு டஜன் யூத மற்றும் யூதரல்லாத பேச்சாளர்கள் யூத எதிர்ப்பு பற்றிய கதைகளைப் பகிர்ந்து கொண்டனர். அவற்றில் பெரும்பாலானவை ஒக்டோபர் 7 க்குப் பிறகு நிகழ்ந்தவை.

வளாகத்தில் யூத மாணவர்களின் அனுபவங்கள் அதிர்ச்சியூட்டும் விடயங்களாக அமைந்தன.

டொராண்டோ மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்தின் மூத்த பெண்மணியான லாரா பார்கெல், அக்டோபர் 7 முதல் பாலஸ்தீனிய ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் தன் மீது எச்சில் துப்பினர் என ஊடகம் ஒன்றிடம் கூறினார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், ஒரு எதிர்ப்பாளர் அவரது தோளைப் பிடித்து இழுத்து, "மிகவும் மோசமான ஹிட்லர் தனது வேலையை ஒழுங்காக முடிக்கவில்லை. அவர் சரியாகச் செய்து முடித்திருந்தால் கேவலமான சியோனிஸ்டுகளான நீங்கள் இன்று உயிருடன் இருக்க மாட்டீர்கள் என்று என்னிடம் கூறினார்" – என்றும் அவர் சொன்னார்.



# கடன் அட்டை இயந்திர திருட்டு ரொறன்ரோவில் திடீர் அதிகரிப்பு

ரொறன்ரோவில் கடன் அட்டை இயந்திர திருட்டுச் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

சிறு வியாபாரங்களில் ஈடுபடும் நிறுவனங்கள் அதிகளவில் இலக்கு வைக்கப்படுவதாகக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

வங்கி அட்டைகள் மூலம் கொடுக்கல் – வாங்கல் செய்வதற்கு உதவும் இயந்திரங்கள் இவ்வாறு கள வாடப்ப டுவதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

சிறு வியாபாரங்களில் ஈடுபடுவோர் இந்த நடவடிக்கைகளினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் சுமார் 300 சிறு வியாபார நிறுவனங்களின் விற்பனை இயந்திரங்கள் களவாடப்பட் டுள்ளன.

இவ்வாறான களவுச் சம்பவங்களி னால் சில நிறுவனங்கள் 50,000 டொலர்கள் வரையில் நட்டமடைந் துள்ளன.

# கனடாவில் குடியேறுகின்ற பலர் பின்னர் இடம் பெயர்கின்றனராம்

## வாழ்க்கைச் செலவுப் பிரச்சினைக்கு ஈடுகொடுக்க முடியாமல்

கனடாவில் குடியேறும் குறிப்பிடத் தக்க எண்ணிக்கையிலானவர்கள், இங்கு வாழ்வதற்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் நாட்டை விட்டு வெளியே றுகின்றனர் எனத் தெரிவிக்கப்ப டுகின்றது.

கனடிய அட்லாண்டிக் பேரவை குடியேறிகள் தொடர்பில் இந்த எச்சரிக் கையை விடுத்துள்ளது.

கனடாவிற்குள் குடியேறும் குறிப் பிடத்தக்க எண்ணிக்கையிலான வெளி நாட்டுப் பிரஜைகளினால் வாழ்க்கைச் செலவு பிரச்சினைக்கு ஈடுகொடுக்க முடியவில்லை என அந்தப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் குடியேறும் சில ஆண்டுக ளில் அவர்கள் வேறும் நாடுகளுக்கு புலம்பெயரத் தொடங்கி விடுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டில் குடியேறிகளின் எண்ணிக்கை 6,000 மாக காணப்பட்டதாகவும், 2023 ஆம்



ஆண்டில் இந்த எண்ணிக்கை 32, 000 மாக உயர்வடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இவ்வாறு நாட்டுக்குள் பிரவேசிக்கும் குடியேறிகளில் 50 வீதமானவர்கள் மட்டுமே ஐந்து ஆண்டு களுக்கு மேல் கனடாவில் தாக்குப் பிடிக்கின்றனர் எனச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

வீடமைப்பு, மருத்துவ சேவை, கல்வி வசதி, பாடசாலை வசதி போன்ற சில காரணிகளினால் குடியேறிகள் தொடர்ச் சியாக கனடாவில் வாழ்வதற்கு விரும் புவதில்லை எனத் தெரிவிக்கப்ப டுகின்றது.

அண்மையில் போர் காரணமாக உக்ரைனிலிருந்து கனடாவின் நோவா ஸ்கோடியாவில் குடியேறிய பெண் ஒருவர் வாழ்க்கைச் செலவு பிரச்சினை காரணமாக கனடாவை விட்டு வெளி யேறி, ஜோர்ஜியாவில் குடியேறியுள் ளார்.

கடந்த 2023 ஆம் ஆண்டில் கனடாவில் குடியேறிய டிடென்யா மெலினெக் என்ற பெண்ணே இவ்வாறு கனடாவை விட்டு வெளியேறியுள்ளார்.

வாழ்க்கைச் செலவு பிரச்சினை காரணமாக இவ்வாறு கனடாவை விட்டு வெளியேறினார் என அவர் தெரிவித் துள்ளார்.

எனவே கனடாவிற்குள் குடியேறு வோர் இந்தக் காரணிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தி சரியான திட்டமிடலுடன் குடியேறுவது பொருத்தமானது எனத் தெரிவிக்கப்படுகின்றது.